
# கலைஞர் அரசு

## காவலர்களின் காவலன்



# கலைஞர் அரசு

## - 'காவலர்களின் காவலன்'

மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள்
14-12-97 அன்று, சென்னை-சாஸ்திரிநகர் காவல்நிலையப்
புதிய கட்டடத்தைத் திறந்துவைத்து ஆற்றிய உரை
மற்றும்
காவல்துறையினருக்குக் **கலைஞர்** அரசால்
அளிக்கப்பட்ட சலுகைகள், அடிப்படை வசதிகள் - மேம்பாடு,
நவீனமயமாக்கல் ஆகியவற்றின் தொகுப்பு.

*வெளியீடு:*
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

சிறப்பு வெளியீடு எண் : 7

# கலைஞர் அரசு

## - 'காவலர்களின் காவலன்'

'தமிழரசு' இலவச வெளியீடு

15-12-1997

*வெளியிடுபவர்:*
இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

தமிழரசு அச்சகம்,
சென்னை-600 002.

# காவலர்கள் என்றென்றைக்கும் எங்கள் நண்பர்களே

**- முதலமைச்சர் கலைஞர்**

**சா**ஸ்திரி நகர் காவல் நிலையத்தைத் திறந்து வைக்கின்ற இந்த இனிய வைபவத்தில் கலந்துகொண்டு உங்களையெல்லாம் சந்திக்கின்ற நல்ல வாய்ப்பினைப் பெற்றமைக்காக நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இங்கே தம்பி பாலு பேசும்போது, மதச் சார்பற்ற நிலையை நாடி இந்த நாடும், நாட்டில் இயங்குகிற பல்வேறு அரசியல் இயக்கங்களும், சமுதாய இயக்கங்களும், இயக்கங்களில் ஈடுபடாத ஆன்றோர்களும், சான்றோர்களும் இருக்கின்ற நிலையை எடுத்துக் கூறினார்.

இந்த மேடையிலேயே இஸ்லாமிய சமுதாயத்து நண்பர் ஒருவரும், இந்து மதத்தைச் சேர்ந்த பெரியவர் ஒருவரும், கிறித்துவ சமுதாயத்தைச் சேர்ந்த பேராயர் ஒருவரும் எனக்கு வரிசையாக வந்து சால்வைகள் அணிவித்ததை அவர் உதாரணமாக எடுத்துச் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொண்டார். அவர்கள் மேடைக்குத் தனித்தனியாக வந்தது மாத்திரமல்ல, நான் எதிரே பார்க்கிறேன்; வந்தவர்கள் மூவருமே ஒன்றாக ஒரே வரிசையிலே இந்தப் பந்தலிலே அமர்ந்திருக்கிறார்கள்.

பந்தலிலே மாத்திரமல்ல, பாரதத் திருநாடு முழுதும் இந்தக் காட்சியைக் காணத்தான் நான் விரும்புகிறேன். நாட்டிலே உள்ள நல்லவர்கள் எல்லாம் இந்தக் காட்சிக்காகத்தான் காத்துக் கிடக்கிறார்கள். சிறுபான்மைச் சமுதாயத்தினர், பெரும்பான்மைச் சமுதாயத்தை மதித்துச் செல்ல வேண்டும் என்பதையும், பெரும்பான்மைச் சமுதாயத்தினர் சிறுபான்மை சமுதாயத்தை அரவணைத்துச் செல்லவேண்டும் என்பதையும் குறிக்கோளாகக் கொண்டிருக்கின்ற ஒரு இயக்கத்தின் தலைமைப் பொறுப்பிலே இருப்பவன் என்கின்ற முறையிலும், அந்த இயக்கம் இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற காரணத்தால் அந்தப் பொறுப்பையும் நிறைவேற்ற வேண்டியவன் என்ற முறையிலும் அரசே இந்தக் காரியங்களை எடுத்துச் செய்ய வேண்டும் என்றில்லாமல்

சமுதாயத்துப் பெருமக்கள் அவர்களாகவே இந்த அமைதி வழியை விதைப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்; அதற்குக் காவல் துறை கண்டிப்பாக ஒத்துழைப்பு வழங்க வேண்டும்; அதைப் போல காவல்துறைக்கும் அவர்கள் ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என்ற செய்தியை இந்தக் கட்டடத் திறப்பு விழாவின்போது நான் வெளியிட விரும்புகிறேன்.

## ஆறும் உடையவன் அரசருள் ஏறு!

காவல்துறை ஒரு நாட்டிற்கு எவ்வளவு முக்கியமானது என்பதைத் தம்பி துரைமுருகன் இங்கே எடுத்துக் காட்டினார். வள்ளுவரின் குறளில் அரசன் தலைசிறந்தவனாக இருக்கிறான் என்றால், அவன் எந்த நிலையிலே இருந்தால் அரசர்களில் தலையானவனாக இருப்பான் என்பதைச் சொல்ல வரும்போது - வள்ளுவர் கூறுகிறார். "படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் ஆறும் உடையவன் அரசருள் ஏறு'' என்று குறிப்பிடுகிறார்.

படை, குடி - குடி என்றால் குடிமக்கள், வேறுபொருள் கொள்ளக் கூடாது என்று மாலை நேரத்தில் சில நண்பர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, கூழ் - செல்வம் அல்லது உணவு, அமைச்சு, நட்பு, அரண் இந்த ஆறும் உடையவன்தான் அரசர்களிலேயே தலையாயவன் என்றார், வள்ளுவர்.

அன்று அரசர்கள் இருந்தார்கள், இப்போது அரசர்கள் இல்லை; அரசுகள் இருக்கின்றன. அரசுகளிலே தலையாய அரசு என்றால் - இந்த ஆறும் உடைய அரசாக இருக்க வேண்டும். இந்த ஆறில் வள்ளுவர் முதலிலே வைத்திருப்பது படையைத்தான். அந்தக் காலத்திலேயே-2000 ஆண்டுகளுக்கு முன்பே ஒரு நாடு வலிமையாக இருக்க வேண்டுமானால், வலிமையாக இருந்தால்தான் பிறகு அங்கே உருவாகின்ற வளத்தைக் காப்பாற்ற முடியும்; அங்கேயிருக்கின்ற மக்களைக் காப்பாற்ற முடியும்; அமைச்சர்கள் உருவாக முடியும். பிறகு அந்த நாட்டிற்கும் இன்னொரு நாட்டிற்கும் நட்பு உருவாக முடியும்; அரண் காப்பாற்றப்பட முடியும் - இவைகளை எல்லாம் வைத்துத்தான் முதல் நிலையிலே வள்ளுவர் படையை

முதலாவதாக வைத்து - படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் இந்த ஆறும் உடையவன் அரசருள் ஏறு - என்று குறிப்பிட்டார். அந்தப் படை எப்படி இருக்க வேண்டும் என்பதனை இங்கே எனக்கு முன்னால் பேசிய உள்துறைச் செயலாளர் திரு. பூரணலிங்கம் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

**நான் காவலர்களின் காவலன்:**

காவலர்களிடத்திலே எனக்கு இன்று நேற்றல்ல, நான் காவல்துறைக்கு இன்றைக்குப் பொறுப்பேற்றுள்ள முதலமைச்சர் என்ற காரணத்தினால் மாத்திரமல்ல - இந்தப் பொறுப்புக்கள் எல்லாம் வராததற்கு முன்பே - காவல்துறை நண்பர்களுக்காக - எதிர்க்கட்சிக்காரனாக இருந்தபோதே வாதாடியவன்; அவர்களுக்காகப் போராடியவன். பொதுவாக எதிர்க்கட்சி என்றால், காவலர்களை எதிர்த்துப் போராடுவார்கள். காவலர்களைக் குறை சொல்வார்கள்; காவலர்கள் மீது பழி சுமத்துவார்கள், காவலர்களைக் குற்றஞ்சாட்டுவார்கள். இது வெள்ளைக்காரன் காலத்திலிருந்து இந்திய நாட்டில் காவலர்கள் என்றாலே ஒரு இழுக்கு, ஒரு இழிமொழி, ஒரு கேவலம், ஒரு ஏளனம், ஒரு எள்ளி நகையாடல் - இப்படித் தூற்றப்பட்ட ஒரு இலாகாவாக இந்த இலாகா இருந்தது உண்டு. இன்றைக்கும் அரசியல் கட்சிகள் பல கட்சிகள் எதற்கெடுத்தாலும் காவல்துறை மீது பழி சுமத்துவதை நாம் பார்த்திருக்கிறோம்.

நான் எதிர்க்கட்சியாக இருந்த அந்த காலத்திலேயே எதிர்க்கட்சி என்கின்ற தகுதியைப் பெறாமல் எதிர்க் கட்சிகளிலே ஒரு கட்சியைச் சேர்ந்தவன் என்ற முறையில் இருந்த அந்தக் காலத்திலேயே - குறிப்பாக 1960களில் அறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையில் இந்த இயக்கத்தில் பணியாற்றிக்கொண்டிருந்த அந்தக் காலக்கட்டத்தில், மக்களிடத்திலே சில கொள்கைகளைப் பரப்புவதற்காக எழுதி நடித்த நாடகங்களில் ஒரு நாடகம் உதயசூரியன் என்ற நாடகம். அந்த நாடகத்திலே பல காட்சிகளில் நான் காவல்துறை நண்பர்களுக்காக வாதாடியிருக்கிறேன். காவல்துறையில் இருக்கின்ற நண்பர்கள், காவலர்கள் - அதிகாரிகள் கூட அல்ல, சாதாரண நிலையிலே இருக்கின்ற கான்ஸ்டபிள் என்று அழைக்கப்படுகின்ற காவலர்கள் எந்த அளவிற்குத்

தங்களுடைய வாழ்க்கையை நகர்த்த வேண்டியிருந்தது என்பதையெல்லாம் அந்த நாடகத்திலே நான் எடுத்துக் காட்டியிருக்கிறேன்.

அலுத்துச் சலித்து இரவு 11 மணிக்கோ 12 மணிக்கோ காவலர் இல்லத்திற்கு வருவார். வந்து சாப்பிட ஏதாவது இருக்கிறதா என்பார். என்ன இருக்கிறது என்று சொல்லிவிட்டு, - பழைய சாதம்தான் இருக்கிறது என்று - பழைய சாதத்தைப் பிழிந்து ஒரு தட்டிலே வைத்து - இதுதான் என்று துணைவியார் காட்டுவார். பக்கத்திலே உட்கார்ந்துகொண்டு, கணவன்-காவலர் தொட்டுக் கொள்ள ஒன்றும் இல்லையா என்பார். "நான்தான் இருக்கிறேன்.. வேறு யாரும் இல்லை" என்று அந்த அம்மாள் வேடிக்கையாகச் சொல்வார். ஆனால், எவ்வளவு வேதனையான கருத்தை வேடிக்கையாக அந்த நாடகத்திலே நான் புகுத்தினேன் என்பது அதைத் தடை செய்த பிறகுதான் மற்றவர்களுக்கெல்லாம் தெரிந்தது.

அதிலே ஒரு பாடல்கூட எழுதியிருந்தேன். அப்போதெல்லாம் காவல்துறையிலே காவலர்களுக்கு 75 ரூபாய், 80 ரூபாய்தான் மாதச் சம்பளம். அதை வைத்து - காவலரின் துணைவியார் தன் குழந்தையைத் தாலாட்டுவதைப் போலவும் - அப்படித் தாலாட்டுகின்ற நேரத்தில் பாடுவதைப் போலவும் அந்தப் பாட்டை எழுதியிருந்தேன்.

நானே எழுதி, நானே நடித்த நாடகம் உதயசூரியன். அந்தப் பாட்டில் "போலீஸ் வேலைக்கென்று போகின்ற நொப்பனுக்கு உன்னைப் போல நாலு வந்து பிறந்து விட்டால் காவி உடை வேண்டுமடா, கமண்டலமும் தேவையடா, போலீஸ்காரனுக்குப் புத்திரனாய் வந்துதித்த தரித்திரமே கண் வளராய்"- என்று அவள் பாடுவாள். இப்படிப் பாடப்பட்ட - தாலாட்டு அடங்கிய அந்த நாடகம் அந்தக் காலத்து ஆட்சியிலே - எந்த ஆட்சி என்று நான் சொல்ல விரும்பவில்லை. 1967க்கு முன்பிருந்த ஆட்சியிலே தடை செய்யப்பட்டது. உதயசூரியன் நாடகத்திற்குத் தடை! நாடகத்தை மேடையிலே நடிப்பதற்கு மாத்திரம் தடை இல்லை. உதய சூரியன் நாடகப் புத்தகத்திற்கே தடை போடப்பட்டது. 1962ஆம் ஆண்டு நான் தஞ்சைத் தொகுதியிலே வெற்றி பெற்று சட்டமன்றத்திலே எதிர்க்கட்சித் துணைத் தலைவனாக அமர்ந்திருந்தபோது இதைச் சொல்லி, இந்த நாடகத்தை ஏன் தடை செய்ய வேண்டுமென்று அன்றைய முதலமைச்சரை நான் கேட்டேன்.

அவர் சொன்னார், "நீங்கள் போலீஸ்காரர்களைத் தூண்டிவிடுகிறீர்கள். அதனால்தான் அந்த நாடகத்தைத் தடை செய்தோம்" என்று சொன்னார். எது தூண்டுதல் என்று கேட்டுவிட்டு நான் எழுதிய அதே தாலாட்டுப் பாடலைச் சட்டசபையில் ஒரு முறை பாடிக்காட்டி, இதில் தடை செய்வதற்கு என்ன இருக்கிறது என்று கேட்டு - தடை செய்யப்பட்ட அந்தப் பாட்டைச் சட்டமன்றப் பதிவேட்டிலே எப்படியோ அன்றைக்குப் பதிவு செய்தேன். இது ஒரு நிகழ்ச்சி. ஆனால், தடைசெய்யப்பட்ட நாடகம், பிறகு 1967இல் அண்ணா தலைமையிலே ஆட்சி அமைந்து, அதற்குப் பிறகுதான் தடை நீக்கப்பட்டது.

## காவலர்களுக்காக அவர்தம் குறை களைய முதன் முதல் போலீஸ் கமிஷன்:

இதைச் சொல்வதற்குக் காரணம் பாட்டு எழுதியதோடு மாத்திரமல்ல, 69-இல் அண்ணா அவர்களின் மறைவிற்கு பிறகு நான் ஆட்சிப் பொறுப்பேற்றதும், முதன்முதல் செய்த பணி-கோபாலசாமி அய்யங்கார் ஐ.சி.எஸ்., அவர்கள் தலைமையில் இந்தியாவிலேயே ஒரு மாநில அரசு காவல் துறைக்காக ஒரு தனி கமிஷன் நியமித்தது என்றால், தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான், அந்தக் கமிஷன் நியமிக்கப்பட்டது.

இந்தியாவில் ஒரு மாநில அரசு போலீஸ் கமிஷன் நியமித்தது என்று அதுவரையில் சரித்திரமே கிடையாது. 1969க்கு பிறகுதான் போலீஸ் கமிஷன் அமைத்து, அதனுடைய பரிந்துரைகளைப் பெற்று நிறைவேற்றியதும் நான் பொறுப்பிலே இருந்தபோதுதான். அதற்கு முன்பு 75 ரூபாய், 80 ரூபாய் என்று மாதாந்திரச் சம்பளம் பெற்றுக்கொண்டிருந்த காவலர்கள் அந்தக் கமிஷனின் பரிந்துரைக்குப் பிறகுதான், மாதம் 200 ரூபாய், 250 ரூபாய் என்கின்ற அளவிற்கு ஊதியம் பெறுகின்ற நிலையை எய்தினார்கள். இன்று அந்த ஊதியம் அதிக அளவிற்கு உயர்ந்து போயிருக்கின்றது.

அதற்குப் பிறகும் கூட 1989-90ஆம் ஆண்டுகளில் மீண்டும் நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, நான் முதலமைச்சர் பொறுப்பை ஏற்ற பிறகுதான்

மீண்டும் ஒரு போலீஸ் கமிஷன் அமைக்கப்பட்டு அதனுடைய பரிந்துரைகளில் 90 சதவிகிதம் நிறைவேற்றியதும் கழக ஆட்சிதான்.

### உங்கள் நண்பன்:

இதையெல்லாம் நான் சொல்வதற்குக் காரணம் காவல்துறை பற்றி ஏற்கெனவே ஒரு படம் "உங்கள் நண்பன்" என்று எடுக்கப்பட்டது. நான் உங்களுக்குச் சொல்லிக் கொள்வேன். என்றைக்கும் காவல்துறை எங்கள் நண்பனாகத்தான் இருந்திருக்கின்றது; இருக்க வேண்டும் என்கின்ற அந்த உணர்வோடுதான் நான் இதைச் சொல்கிறேன்.

## தேவைகளைத் தெரிந்து கொள்ள ஆய்வு:

இப்போது கூட உள்துறைச் செயலாளர் குறிப்பிட்டதைப் போல - காவல்துறையின் தலைவர் பொறுப்பை திரு. சர்மா அவர்கள் ஏற்றுக் கொண்டதும், அவரை நான் அழைத்துப் பேசியபோது, அவருக்கு விடுத்த வேண்டுகோள் - அதை அவர் ஆணையாக எடுத்துக் கொள்ளலாம் - ஆணையிட்டு எனக்குப் பழக்கமில்லை - இருக்கின்ற பதவியின் காரணமாக நான் விடுக்கின்ற வேண்டுகோள், ஆணையாக மாறக்கூடும். நான் விடுத்த வேண்டுகோள் ஒவ்வொரு காவல்துறையின் குடியிருப்புகளுக்கும் சென்று ஒவ்வொரு நகரத்திலும் - எல்லா மாவட்டங்களிலும் உள்ள காவல்துறையினரின் குடியிருப்புகளுக்குச் சென்று அவர்களுடைய தேவைகள் என்ன என்பதைத் தெரிந்து கொள்கின்ற வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். எல்லா இடங்களுக்கும் நீங்கள் செல்ல முடியாவிட்டாலும், ஆங்காங்கு இருக்கின்ற மாவட்டக் காவல்துறை அதிகாரிகள் மூலமாக அந்த ஆய்வை நடத்தச்சொல்லி அவர்களுடைய தேவைகளையெல்லாம் உடனடியாக நிறைவு செய்ய நடவடிக்கை எடுங்கள் என்று நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

அவர்களுடைய கோரிக்கைகள் பலவற்றை நிறைவேற்றியிருக்கிறோம். குறிப்பாகத் தனியாக அவர்கள் மின்சாரத்தைப் பயன்படுத்திக் கொள்கின்ற அந்த ஏற்பாடு அவர்களுக்குத் தேவை என்று சொன்னபோது - மின்சாரத்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு வீராசாமி அவர்களின்

துணையோடு அந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு இன்றைக்கு அது நடைமுறையில் இருந்து வருகின்றது.

**தாராளமான நிதி - ஏராளமான திட்டங்கள்:**

முழுமையாக அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை என்றாலும் கூட, நான் இங்கே எடுத்துக்காட்ட விரும்புவதெல்லாம் உள்துறைச் செயலாளரே சொன்னார். தாராளமாக நிதி வழங்கப்படுகிறது, ஏராளமான திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன, அதற்காக எங்களிடம் பணம் அதிகம் இருக்கிறது. ஆனால் பணிகளைத்தான் விரைவாகச் செய்ய முடியவில்லை என்பதைச் சூசகமாக அவர் இங்கே எடுத்துச் சொன்னார். பணிகளை நீங்கள் விரைவாக முடிக்க முடிக்க எவ்வளவு பணம் வேண்டுமானாலும், நாட்டைக் காப்பாற்றுகின்ற - சமுதாயத்தைக் காப்பாற்றுகின்ற - மக்களைக் காப்பாற்றுகின்ற - மக்களுடைய உயிர் உடைமைகளைக் காப்பாற்றுகின்ற - முதல் சேவகனாக இருக்கின்ற காவல்துறைக்கு எவ்வளவு செலவழிக்கவும் இந்த அரசு தயாராக இருக்கின்றது. அவர்களுடைய நன்மைகளுக்காக எவ்வளவும் செலவழிக்க இந்த அரசினிடத்தில் எந்தத் திட்டங்களையும் தரலாம் என்பதை எடுத்துக்கூறி - இந்தக் காவல் நிலையத்தைத் திறந்து வைத்ததிலே நான் மிகுந்த மகிழ்ச்சியுற்று, நான் இந்த அளவில் விடைபெறுகிறேன்.

*- சென்னை சாஸ்திரிநகர் காவல் நிலையப் புதிய கட்டடத்தைத் திறந்து வைத்து 14-12-97 அன்று முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை.*

*"பொது இடங்களில் அனைத்து மக்களையும்
சமத்துவமாக நடத்த வேண்டுமென்று,
அரசே முன்வந்து நடவடிக்கை எடுக்கும்போது,
சட்டத்தை யாரும் கையில் எடுத்துக் கொள்ளக்கூடாது.
இப்படிப்பட்ட நேரங்களில் 'சமூக விரோதிகள்'
உள்ளே புகுந்து வன்முறைகளைப் பயன்படுத்தி,
கொள்ளையடிக்க இடம் கொடுத்துவிடாமல்,
எச்சரிக்கையோடு இருக்க வேண்டும்".*

*- கலைஞர்*

# காவல்துறையினருக்கான அடிப்படை வசதிகள், மேம்பாடு - கடமைகளில் கவனம் செலுத்தி, அவர்தம் பணி சிறக்க, முதலமைச்சர் கலைஞரால் அளிக்கப்பட்ட சிறப்புச் சலுகைகள்

தமிழகக் காவல்துறை, இந்தியாவின் சிறந்த காவல்துறைகளில் ஒன்று என்னும் பெருமையைப் பெற்றுள்ளது. காவல்துறையினர் பல்வேறு சூழ்நிலைகளில் உயிரையும் துச்சமாகக் கருதிப் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டுத் தமிழக மக்களின் அமைதியான வாழ்க்கைக்குப் பெருந்தொண்டாற்றி வருகின்றனர். காவல்துறையினருக்கு வேண்டிய அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் காவலர் தங்கள் கடமைகளில் மேலும் கவனம் செலுத்திச் சிறப்பாகப் பணியாற்றிட முடியும் என்பதால் அதற்கான சிறப்பு நடவடிக்கைகளைக் கலைஞர் தலைமையிலான தமிழக அரசு ஒவ்வொரு காலகட்டத்திலும் மேற்கொண்டு வந்துள்ளது.

★ 1969ஆம் ஆண்டில் இந்தியாவிலேயே முதல்முறையாக - மாநில அரசின் சார்பில் முதல் போலீஸ் கமிஷன் - திரு.ஆர்.ஏ. கோபாலசாமி, ஐ.சி.எஸ்., அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டு, அறிக்கை பெறப்பட்டு அதன் அடிப்படையில் காவல்துறை மேம்பாட்டிற்காகப் பல்வேறு திட்டங்கள் தமிழக அரசால் நிறைவேற்றப்பட்டன.

★ அதேபோல, 1989ஆம் ஆண்டில் கலைஞர் அரசு மீண்டும் அமைந்தபின் ஓய்வு பெற்ற முன்னாள் தலைமைச் செயலாளர் திரு பி.சபாநாயகம் அவர்கள் தலைமையில் தமிழகக் காவல் துறையின் இரண்டாவது போலீஸ் கமிஷன் அமைக்கப்பட்டு, அறிக்கை பெறப்பட்டு, அவ்வறிக்கையில் உள்ள பரிந்துரைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## 1996-ஆம் ஆண்டில் மீண்டும் முதலமைச்சரான கலைஞர் காவல்துறையினர்க்கு வழங்கிய சலுகைகள்:

★ காவல்துறையினர் மீது கனிவும், கருணையும் கொண்டுள்ள கலைஞர் அரசு 1996ஆம் ஆண்டு மே திங்களில் மீண்டும் பொறுப்பேற்ற பிறகு

பல்வேறு சலுகைகளை வழங்கிக் காவல்துறையினருக்கு ஊக்கம் அளித்துள்ளது. அவைகளின் விவரம் :

**கருணைத் தொகை இருமடங்காக உயர்வு:**

★ வீரதீரச் செயல்களில் மரணம் அடைந்த காவல்துறையினருக்கு வழங்கப்பட்ட கருணைத் தொகை ரூபாய் 1 இலட்சம் என்பது ரூபாய் 2 இலட்சம் ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இச்சலுகையினைச் சிறைத்துறை அலுவலர்களுக்கும் நீட்டித்து முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

★ செயல்படமுடியாத அளவுக்கு நிரந்தர ஊனம் அடைந்தவர்களுக்கு வழங்கப்பட்ட கருணைத் தொகை ரூபாய் 20 ஆயிரம் என்பது ரூபாய் 50 ஆயிரம் ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ படுகாயம் அடைந்தோர்க்கு வழங்கப்பட்ட கருணைத் தொகை ரூபாய் 5 ஆயிரம் என்பது ரூபாய் 10 ஆயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது.

★ சாதாரண காயம் அடைந்தோர்க்கு வழங்கப்பட்ட கருணைத் தொகை ரூபாய் 3 ஆயிரம் என்பது ரூபாய் 5 ஆயிரம் ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**உணவுச் செலவு உயர்வு:**

★ அவசர காலங்களில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படும் காவல்துறை அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு வந்த தின உணவுப்படியினை உயர்த்தி வழங்கிட கலைஞர் ஆணை.

★ இரண்டாம் நிலைக் காவலர்கள்/லான்ஸ் நாயக் ஆகியோருக்கு வழங்கப்பட்டு வந்த உணவுப்படி ரூ.16-லிருந்து ரூ.25-ஆக உயர்வு.

★ தலைமைக் காவலர்கள்/முதல்நிலைக் காவலர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்டு வந்த உணவுப்படி ரூ.20 லிருந்து ரூ.30 ஆக உயர்வு.

★ ஆய்வாளர்கள்/உதவி ஆய்வாளர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்டு வந்த உணவுப்படி ரூ.30 லிருந்து ரூ.45 ஆக உயர்வு.

**பயணப்படி வரம்பு உயர்வு:**

★ தமிழ்நாடு சிறப்புக் காவல்படை மற்றும் குற்றப்புலனாய்வுத் துறையின் சிறப்புப் பிரிவுகளில் பணிபுரியும் காவல்துறை அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பயணப்படி வரம்பு 40 விழுக்காடு என்பது 45 விழுக்காடாக உயர்த்தப்பட்டுள்ளது.

★ மாவட்டங்கள் மற்றும் ஆயுதப்படைப் பிரிவுகளில் பணிபுரியும் காவல்துறை அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பயணப்படி 30 சதவிகிதத்திலிருந்து 40 சதவிகிதமாக உயர்த்தி வழங்கப்படுகிறது.

**சீருடைப்படி உயர்வு:**

காவலர்கள் மற்றும் தலைமைக் காவலர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாதச் சீருடைப்படி ரூ.25 லிருந்து ரூ.30 ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

**நற்பணி புரிந்தோர்க்குச் சிறப்புப்படி உயர்வு:**

★ காவல்துறையில் அப்பழுக்கின்றி நற்பணி புரிந்துவரும் காவல் பணியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் 1996-97ல் சிறப்புப்படி வழங்கும் புதிய திட்டம் **கலைஞர்** அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது.

★ இத்திட்டத்தின்படி, 15 ஆண்டுகள் அப்பழுக்கின்றி நற்பணி புரிந்தோர்க்கு கடந்த ஆண்டு முதல் மாதந்தோறும் வழங்கப்பட்டு

வந்த சிறப்புப்படியான ரூ.5 தற்பொழுது ரூ.15 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ 20 ஆண்டுகள் அப்பழுக்கின்றி நற்பணி புரிந்தோர்க்கு கடந்த ஆண்டு முதல் மாதந்தோறும் வழங்கப்பட்டு வந்த சிறப்புப்படியான ரூ.7.50 தற்பொழுது ரூ.20 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ 25 ஆண்டுகள் அப்பழுக்கின்றி நற்பணி புரிந்தோர்க்கு கடந்த ஆண்டு முதல் மாதந்தோறும் வழங்கப்பட்டு வந்த சிறப்புப்படியான ரூ.10 தற்பொழுது ரூ.25 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ 30 ஆண்டுகள் அப்பழுக்கின்றி நற்பணி புரிந்தோர்க்கு கடந்த ஆண்டு முதல் மாதந்தோறும் வழங்கப்பட்டு வந்த சிறப்புப்படியான ரூ.15 தற்பொழுது ரூ.30 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ 35 ஆண்டுகள் அப்பழுக்கின்றி நற்பணி புரிந்தோர்க்கு கடந்த ஆண்டு முதல் மாதந்தோறும் வழங்கப்பட்டு வந்த சிறப்புப்படியான ரூ.20 தற்பொழுது ரூ.40 ஆக உயர்வு.

**"செயல் திறமைப்படி" உயர்த்தி வழங்கப்படுகிறது:**

★ ஆயுதச் சேமப்படையில் பணிபுரியும் காவலர்களுக்கு வழங்கப்பட்டு வந்த செயல்திறமைப்படி ரூ.3லிருந்து ரூ.10 ஆக உயர்த்தப் பட்டுள்ளது.

★ ஆயுதச் சேமப்படையில் பணிபுரியும் தலைமைக் காவலர்களுக்கு வழங்கப்பட்டு வந்த செயல்திறமைப்படி ரூ.5லிருந்து ரூ.15 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

> ***"தவறு செய்தவர்கள் மீது உடனடி நடவடிக்கையைக் காவல்துறை எடுக்கத் தவறினால், பொதுமக்களின் நம்பிக்கையை இழக்க நேரிடும்".***
>
> **- கலைஞர்**

**உத்தமர் காந்தி பதக்கம்:**

★ கள்ளச்சாராயத்தை ஒழிக்கும் பணியில் சிறந்து விளங்குவோரை ஊக்கப்டுத்தும் வகையில், கடந்த ஆண்டு முதல் 'உத்தமர் காந்தி பதக்க'மும், ரூ.10 ஆயிரம் வீதம் பணமுடிப்பும் வழங்கும் புதிய திட்டத்தின்படி, இதுவரையில் 8 பேருக்கு காந்தி பதக்கங்களும், தலா ரூ.10 ஆயிரம் வீதம், ரூ.80 ஆயிரமும் வழங்கப்பட்டுள்ளன.

**முதலமைச்சர் காவல் பதக்கம் பெறுவோரின் மாதப்படி உயர்வு:**

★ முதலமைச்சர் காவல் பதக்கம் பெறும் காவலர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திரப்படி ரூ.20லிருந்து ரூ.40 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ தலைமைக் காவலர்கள் மற்றும் நாயக்குகளுக்கு வழங்கப்படும் மாதாந்திரப்படி ரூ.25லிருந்து ரூ.50 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**அண்ணா பதக்க விருதுத் தொகை உயர்வு:**

★ தமிழக முதலமைச்சரின் காவல் பதக்கம் - அண்ணா பதக்கம் பெறுகின்ற காவலர் மற்றும் தலைமைக் காவலர்களுக்கு வழங்கப்பட்டு வந்த அண்ணா பதக்க விருதுத் தொகை ரூ.1,500லிருந்து ரூ.2,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ உதவி ஆய்வாளர் மற்றும் ஆய்வாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த அண்ணா பதக்க விருதுத் தொகை ரூ.2,500லிருந்து ரூ.3,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ காவல்துறை துணைக் கண்காணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த அண்ணா பதக்க விருதுத் தொகை ரூ.4 ஆயிரம் என்பது ரூ.5 ஆயிரம் என உயர்த்தப்பட்டுள்ளது.

★ மேலே காணும் அண்ணா பதக்கம் பெறுவோரில் வீரதீரச் செயல் புரிந்தோர்க்கு சிறப்புப்படியாக ரூ.100 மாதந்தோறும் வழங்கப்படும்.

## காவலர்களுக்குப் பதவி உயர்வுகள்:

★ 10 ஆண்டுகள் பணி முடித்தும் பதவி உயர்வு பெறாமல் உள்ள இரண்டாம்நிலை ஆண் காவலர்களுக்கு, முதல்நிலைக் காவலர்களாகப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

★ 15 ஆண்டுகள் பணி முடித்தும் பதவி உயர்வு பெறாமல் உள்ள முதல் நிலை ஆண் காவலர்களுக்கு, தலைமைக் காவலர்களாகப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

★ 15 ஆண்டுகள் பணி முடித்தும் பதவி உயர்வு பெறாமல் உள்ள பெண் காவலர்களுக்கு, தலைமைக் காவலர்களாகப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

## சிறப்புக் காவல் அணிகளுக்கு நிரந்தர உணவு முன்பணம் உயர்வு:

★ தமிழ்நாடு சிறப்புக் காவல் அணிகளுக்கு வழங்கப்படும் நிரந்தர உணவு முன்பணம் ரூபாய் ஐயாயிரத்திலிருந்து ரூ.25 ஆயிரமாக உயர்வு.

## நாயக்குகளுக்கு அவில்தாரர்களாகப் பதவி உயர்வு:

★ தமிழ்நாடு சிறப்புக் காவல் அணிகள் மற்றும் ஆவடி படைப்பயிற்சி மையத்தில் உள்ள 90 நாயக்குகள் அவில்தாரர்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளனர்.

## ஓட்டுநர்கள் சிறப்புப்படி உயர்வு:

★ காவல்துறையில் பணிபுரியும் ஓட்டுநர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்பட்டு வந்த சிறப்புப்படி ரூ.40லிருந்து ரூ.60 ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

> "ஆதிதிராவிடர் பழங்குடி இனத்தவர்க்கு எதிராக இழைக்கப்படும் வன்கொடுமைகளைத் தடுத்திட தக்க நடவடிக்கையினைக் காவல்துறையினர் விரைந்து மேற்கொள்ளவேண்டும்".
>
> - கலைஞர்

**காவல் இசைக்குழுவின் பணியாளர்களுக்கு மாதச் சிறப்பூதியம் உயர்வு:**

**மாநில இசைக்குழு**

★ சேமப்படை ஆய்வாளர் மற்றும் பேண்டு மாஸ்டர் ஆகியோருக்கு வழங்கப்பட்டு வந்த சிறப்பூதியம் ரூ.50லிருந்து ரூ.100 ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

★ உதவி சேமப்படை ஆய்வாளர் மற்றும் உதவி பேண்டு மாஸ்டர் ஆகியோருக்கு வழங்கப்பட்டு வந்த சிறப்பூதியம் ரூ.25லிருந்து ரூ.75 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ தலைமைக் காவலருக்கு வழங்கப்பட்டு வந்த சிறப்பூதியம் ரூ.25லிருந்து ரூ.60 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ முதல்நிலை மற்றும் இரண்டாம் நிலை காவலர்களுக்கு வழங்கப்பட்டு வந்த சிறப்பூதியம் ரூ.15லிருந்து ரூ.40 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**ஆவடி படைக்கல மைய இசைக்குழு:**

★ உதவி ஆய்வாளருக்கு வழங்கப்பட்டு வந்த சிறப்பூதியம் ரூ.25 லிருந்து ரூ.75 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ அவில்தார் (பேண்டு) வழங்கப்பட்டு வந்த சிறப்பூதியம் ரூ.10 லிருந்து ரூ.50 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ நாயக் மற்றும் லேன்ஸ் நாயக் ஆகியோருக்கு வழங்கப்பட்டு வந்த சிறப்பூதியம் ரூ.10லிருந்து ரூ.40 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

## காவலர் நலநிதி மானிய உயர்வு:

★ தமிழ்நாடு காவலர் நலநிதிக்கு வழங்கப்பட்டுவந்த மானியத் தொகை ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.25 இலட்சம் ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

## கூடுதல் குடியிருப்புகள் உருவாக்கம் - புதிய வசதிகள்:

★ காவல்துறை பணியாளர்களுக்குக் காவலர் வீட்டுவசதிக் கழகத்தால் ஆண்டுதோறும் கட்டப்படும் குடியிருப்புகளின் எண்ணிக்கை 1,500 என்பது 2,500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கென ரூ.80 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ காவலர் குடியிருப்புகளில் 2,751 நவீனக் கழிப்பிடங்களைக் கட்ட ரூ.5 கோடி ஒதுக்கி, அரசு ஆணையிட்டுள்ளது.

## வீடுகட்டும் முன்பணத்தொகை உயர்வு:

தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தின் மூலம் வீடு கட்டும் திட்டத்திற்கு அரசு வழங்கும் முன்பணத்தொகை ரூ.1 கோடியிலிருந்து ரூ.3 கோடி ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

## உணவுப் பொருள் மானியத் தொகை உயர்த்தி வழங்கப்படுகிறது:

★ 1 கிலோ துவரம் பருப்புக்கு வழங்கப்பட்டு வந்த மானியம் ரூ.4லிருந்து ரூ.10 ஆக வழங்கப்படுகிறது.

★ 1 கிலோ உளுத்தம் பருப்புக்கு வழங்கப்பட்டு வந்த மானியம் ரூபாய் 3லிருந்து ரூபாய் 10 ஆக வழங்கப்படுகிறது.

> "தாழ்த்தப்பட்ட மக்களோடு கைகோர்த்து, அடக்கப்பட்ட மக்களை அரவணைத்து, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உறுதுணையாக இருந்து நல்வாழ்வைச் சமுதாயத்திலே பரவலாக்கிட உறுதியேற்போம்".
>
> - கலைஞர்

★ 1 கிலோ ரவை/மைதாவுக்கு வழங்கப்பட்டு வந்த மானியம் ரூ.1.50லிருந்து ரூ.3 ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

**காவலர் குடும்ப குழு ஈட்டுறுதித் திட்ட நிதி ஒதுக்கீடு:**

★ காவலர் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கான குழு ஈட்டுறுதித் திட்டத்திற்கு ரூபாய் 10 இலட்சம் நிதி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**காவலர்களுக்குக் குடும்ப அட்டைகள்:**

★ காவலர்களுக்கு சுமார் 80 ஆயிரம் குடும்ப அட்டைகள் புதிதாக வழங்கப்படும். இந்த அட்டைகளைப் பயன்படுத்திக் காவலர்கள், ரேஷன் கடைகளில் மானிய விலையில் மண்ணெண்ணெய் பெற்றுக்கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது.

**காவலரின் குடும்ப உறுப்பினர்க்கும் மருத்துவ நலத்திட்டம்:**

அரசு ஊழியர் நலத்திட்டத்தில் வழங்கப்படுவது போல், காவலர்களுக்கான மருத்துவ நலத்திட்டத்திலும் காவலர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கும் மருத்துவ நலத்திட்ட பயன் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

**காவலர் குடியிருப்புகளுக்குத் தனி மீட்டர்:**

★ தமிழகத்தின் பல பகுதிகளிலும் உள்ள 13,932 காவலர் குடியிருப்புகளுக்கு உடனடியாக தனிமீட்டர் பொருத்திட ஆணையிடப்பட்டுள்ளது.

**காவல்துறை மருத்துவ நலநிதியின் அரசு மானியம் உயர்வு:**

★ தமிழ்நாடு காவல்துறை நலநிதித் திட்டத்திற்கு அரசு வழங்கி வந்த மானிய நிதி உதவி 10 இலட்சம் ரூபாயிலிருந்து 25 இலட்ச ரூபாய் என உயர்த்தப்பட்டுள்ளது.

முதலமைச்சர் **கலைஞர்** அவர்களால் இத்தகு சலுகைகள் வழங்கப்பட்டு, காவலர்களின் நலம் காப்பதில் தமிழ்நாடு, இந்தியாவிலேயே முன்னணி மாநிலமாய்த் திகழ்கிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# சட்டம் - ஒழுங்கை நிலைநாட்டி, குற்றங்களை விரைந்து களைந்து நல்லிணக்கத்தோடு கூடிய - ஒரு புதிய தமிழகத்தினை உருவாக்கிட, சுமார் 22,000 காவல் பணியாளர்களைப் புதிதாக நியமித்து, கலைஞர் ஆணை.

## 10 ஆயிரம் காவலர்கள் நியமனம்:

★ கடந்த ஆட்சியில் 10 ஆயிரம் காவலர்கள் நியமனம் செய்வதாக அறிவிக்கப்பட்டு உரிய நியமன ஆணைகள் இறுதிவரை வெளியிடப்படவேயில்லை. மீண்டும் **கலைஞர்** அவர்கள் முதலமைச்சரானதும், அத்தகையோர் எந்த வழியில் தேர்வு செய்யப்பட்டிருந்தாலும் அவ்விளைஞர்களின் எதிர்கால நலன் கருதி அவர்கள் அத்தனை பேரும் நியமனம் செய்யப்படுவார்கள் எனப் பரந்த நோக்கில், **கலைஞர்** அவர்களால் அறிவிக்கப்பட்டது.

★ அந்த அறிவிப்பின்படி முதல் கட்டமாக 1,581 பெண் காவலர்கள் உட்பட மொத்தம் 4,602 காவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் 16.10.97-ல் பணியில் அமர்த்தப்பட்டனர்.

★ இரண்டாம் கட்டமாக 4,677 ஆண் காவலர்களும், 1,023 பெண் காவலர்களும் ஆக மொத்தம் 5,700 காவலர்கள் 1.11.97 முதல் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள 12 தற்காலிக காவல் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று வருகிறார்கள். இவர்களது பயிற்சி நிறைவுற்றதும், காவலர்களாகப் பணியமர்த்தப்படுவார்கள்.

## 10,000 காவலர்கள் தேர்வு செய்ய அரசு ஆணை:

★ நடப்பு நிதியாண்டில் 5 ஆயிரம் ஆண் காவலர்களையும், 5 ஆயிரம் பெண் காவலர்களையும் நியமனம் செய்திட அனுமதி வழங்கி, அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இவர்களை தமிழ்நாடு சீருடைப் பணியாளர்

தேர்வாணையத்தின் மூலம் தேர்வு செய்வதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ 1989-90ஆம் ஆண்டில் காவலர் நியமனத்திற்கென மருத்துவத் தேர்வு முதலியவற்றையெல்லாம் முடித்துத் தேர்வு செய்யப்பட்டவர்களில் 2 ஆயிரம் பேர் கடந்த ஆட்சியில் நியமனம் செய்யப்படாமல் விடப்பட்டிருந்தனர்.

★ அவர்களில் இன்னும் வேறு எந்த வேலைக்கும் செல்லாமல் தகுதி படைத்தவர்களாக இருந்த மொத்தம் 1,023 நபர்கள், கடந்த நவம்பர் திங்கள் முதல் காவலர்களாக நியமனம் செய்யப்பட்டுக் காவலர்களுக்குரிய பயிற்சிகளைப் பெற்று வருகிறார்கள்.

**சார் ஆய்வாளர்கள் நியமனம்:**

★ கடந்த ஆட்சியில் 1994-95ஆம் ஆண்டில் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலம் பொதுப் போட்டியில் 1,100 சார்ஆய்வாளர்கள் நியமனத்திற்கெனத் தேர்வு செய்யப்பட்டிருந்தனர். அவர்களில் 500 பேர்கள் மட்டுமே பயிற்சிக்கு அனுப்பப்பட்டனர்.

★ **கருணை உள்ளம் கொண்ட கலைஞர்** அவர்கள் பயிற்சி முடித்த 500 பேர்களுக்கும் பணிநியமன ஆணை வழங்கினார்கள். தற்பொழுது அவர்கள் சார்ஆய்வாளர்களாகப் பணிபுரிந்து வருகின்றனர்.

★ மேலும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள 1,100 நபர்களில் எஞ்சிய 600 நபர்களுக்கும் 12.5.97-ல் சார்ஆய்வாளர்களுக்குரிய பயிற்சியினைப் பெற ஆணை வழங்கப்பட்டது. அந்த 600 நபர்களுடன் காவல்துறையில் பணிபுரிந்து வரும் பட்டதாரிக் காவலர்கள் மற்றும் தலைமைக் காவலர்கள் ஆகியோரிலிருந்து சார்ஆய்வாளர் பதவிகளுக்குத் தேர்வு செய்யப்பட்டவர்களும் ஆக மொத்தம் 818 பேர்கள் 2.6.97 முதல் பயிற்சி பெற்று வருகின்றனர். இப்பயிற்சிகள்

முடிவு பெற்றதும், இவர்களும் சார்ஆய்வாளர்களாகப் பணி அமர்த்தப்படுவார்கள்.

**3 - புதிய மாநகராட்சிகளில் 3 - புதிய காவல் ஆணையகங்கள்:**

★ திருச்சி, சேலம், திருநெல்வேலி ஆகிய 3 புதிய மாநகராட்சிகளிலும் கலைஞரின் ஆணையின்படி 1-6-97 முதல், 3 புதிய காவல் ஆணையகங்கள் உருவாக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. இம்மூன்று காவல் ஆணையகங்களுக்கும் 3 காவல்துறை ஆணையாளர்கள், 6 துணை ஆணையாளர்கள், 6 உதவி ஆணையாளர்கள், 24 ஆய்வாளர்கள், 45 சார் ஆய்வாளர்கள், 84 தலைமைக் காவலர்கள், 18 முதல்நிலைக் காவலர்கள், 1,101 இரண்டாம் நிலைக் காவலர்கள், 21 இதர காவல் பணியாளர்கள், 24 தொழில் நுட்பப் பணியாளர்கள், 192 அமைச்சுப் பணியாளர்கள் ஆக மொத்தம் 1,608 புதிய பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ரூ.8.04 கோடி செலவில், 3 காவல் ஆணையகங்களுக்கும் தேவையான தளவாடப் பொருட்களும், வி.எச்.எப். கருவிகளும் வாங்கப்பட்டுப் பயன்படுத்தப்படுகின்றன.

★ இது தவிர, திண்டுக்கல்லைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய காவல் சரகத் துணைத் தலைவர் அலுவலகம் ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

# முதலமைச்சர் கலைஞரின் தொலைநோக்குப் பார்வையால், நவீனமயமாகி வரும் காவல்துறை

★ சட்டம்-ஒழுங்கு, கொலை, கொள்ளை போன்ற நிகழ்வுகளின் போது ஏற்படும் அவசர காலங்களில் விரைந்து செயல்படுவதற்கெனவும், காவல்துறையினர் திறமையாகப் பணியாற்றுவதற்கெனவும், காவல்துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ், 1996-97-ஆம் ஆண்டிற்கு ரூ.8.33 கோடியும், 1997-98-ஆம் ஆண்டிற்கு ரூ.10 கோடியும் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ சேலம், திருச்சி, திருநெல்வேலி ஆகிய புதிய காவல் ஆணையங்கள், திண்டுக்கல்லில் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட புதிய காவல் சரகத்திற்குமாக 45 மகேந்திரா ஜீப்புகள் வாங்கப்பட்டுள்ளன.

★ மாவட்டங்களின் வாகன வசதிகளைப் பெருக்கிடும் வகையில், 20 மகேந்திரா ஜீப்புகளும், 6 பேருந்துகளும், அவசர விபத்துப் பயனுக்கென 2 ஆம்புலன்ஸ்களும், 15 மினி வேன்களும், புறக் காவல் நிலையங்களில் பணிபுரியும் தலைமைக் காவலர்களின் விரைவுச் செயலாக்கப் பணிகளுக்கென 77 மோட்டார் சைக்கிள்களும், புறக்காவல் நிலையங்களாக இருந்து, தகுதி உயர்த்தப்பட்ட 17 புதிய காவல் நிலையங்களுக்கென முதல் கட்டமாக 5 மாருதி ஜீப்புகளும் ஆக மொத்தம் 170 வாகனங்கள் ரூ.3.5 கோடியில் வாங்கப்பட்டு முதலமைச்சர் **கலைஞர்** அவர்களால் வழங்கப்பட்டன.

ஏற்கெனவே, ரூ.5.30 கோடி செலவில் 330 வாகனங்கள் வாங்கி காவல் பணிகளுக்கென வழங்கப்பட்டுள்ளன.

★ மதுரை மாநகர்க் காவல் பணிக்குக் கூடுதல் ஆயுதச் சேமப்படைப் பிரிவு ஒன்று புதியதாக உருவாக்கி, ஆயுதப் படை சார்பு ஆய்வாளர்கள்-2, தலைமைக் காவலர்கள்- 4, முதல்நிலைக்

காவலர்கள் - 8, இரண்டாம் நிலைக் காவலர்கள் - 48, தலைமைக் காவல் ஓட்டுநர்கள் - 2, இரண்டாம் நிலைக் காவலர் - 1, ஆக மொத்தம் 65 பேர்கள் பணியமர்த்தப் பட்டுள்ளனர். இதற்கென ரூ.37.46 இலட்சம் அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

★ காமராசர் மாவட்டம், இராஜபாளையத்தில் சட்டம்-ஒழுங்கைச் சீரிய முறையில் பராமரிக்கும் பொருட்டு, சிறப்புக் காவல் அணிப் பிரிவு ரூ.9.5 கோடி நிதிஒதுக்கீட்டில் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

**அதிவிரைவுப் படை:**

★ சாதி-மதக்கலவரங்கள் ஏற்படாமல் தடுப்பதோடு, அத்தகு நிலை ஏற்படின் அப்பகுதிகளுக்கு அதிவிரைவில் சென்றடைந்து, விரைவாக நடவடிக்கைகளை மேற்கொண்டு சுமூகச் சூழ்நிலையை உருவாக்கி அமைதியை உருவாக்கிடவும், அதோடு, அப்பகுதியில் மதநல்லிணக்கத்தைப் பேணி, அமைதிச் சூழ்நிலையைத் தொடர்ந்து நிலைநிறுத்திடும் பணிகளுக்கெனவும் 'அதிவிரைவுப் படை' எனும் புதிய அமைப்பு ஒன்று **கலைஞர் அரசினால்** உருவாக்கப் பட்டுள்ளது.

★ தற்பொழுது, தமிழ்நாடு சிறப்புக் காவல் படையிலிருந்து, துணைத் தளவாய்-1, உதவித் தளவாய்-2, ஆய்வாளர்கள்-8, உதவி ஆய்வாளர்கள்-24, அவில்தார்கள்-48, நாயுக்குகள்-24, இரண்டாம் நிலைக் காவலர்கள்-168 ஆகியோரைக் கொண்ட முதலாவதான 'அதிவிரைவுப்படை', முதலமைச்சர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்டு, இப்படைக்கான சிறப்புப் பயிற்சிகள் ஆவடியில் 27-3-97 அன்று தொடங்கிவைக்கப்பட்டது.

**புதிய கட்டடங்கள்:**

★ கோவையில், ரூ.2 கோடி மதிப்பீட்டில், காவல் ஆணையர் அலுவலகம் கட்டப்படுகிறது.

★ சென்னை, காமராசர் - சாலையிலுள்ள, காவல்துறை இயக்குநர் அலுவலகம் ரூ.1.35 கோடியில் புதுப்பிக்கப்படுகிறது.

★ வேலூரில் மாவட்டக் காவல் அலுவலகம் ரூ.1.88 கோடியிலும், சரகத்துணைத் தலைவர் அலுவலகம் ரூ.19.50 இலட்சத்திலும், புதிதாய்க் கட்டும் பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன.

★ கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் ரூ.62 இலட்சத்தில் கட்டப்படுகிறது.

★ 81 காவல் நிலையங்களுக்கு ரூ.15.29 கோடி மதிப்பீட்டில், தற்பொழுது புதிய கட்டடங்கள் கட்டப்படுகின்றன.

**புதிய காவல் நிலையங்கள்:**

★ கடந்த நிதியாண்டில், சென்னையில்-2, திருச்சியில்-1 ஆக 3 புதிய காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. மேலும், 14 புறக்காவல் நிலையங்கள் காவல் நிலையங்களாகவும் நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

★ நடப்பு நிதியாண்டில், 23 புதிய காவல் நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அதோடு, 17 புறக்காவல் நிலையங்கள், காவல் நிலையங்களாகவும் நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

❑❑❑

*"புலியும் மானும் ஒரே துறையில் தண்ணீர் குடித்ததாக புராணங்கள் கூறும் - புலியும் மானும் கூட வேண்டாம்;*
*மானும் மானுமாவது இந்தக் காலத்தில்*
*ஒரே துறையில் தண்ணீர் குடிக்க வேண்டாமா?*
*"ஒன்றே குலம்" என்ற கொள்கை வெற்றியடைய*
*காவல்துறையும் கடமையாற்றிட வேண்டாமா?"*

**- கலைஞர்**

❑❑❑

தமிழரசு

படித்துப்

பயன்பெறுவீர்